10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

## TL 1201 தமிழ் இலக்கியமும் மானுடவாதமும்

நேரம் : 02 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து ஒரு வினாவுக்கும் இரண்டாம் பகுதியில் இரண்டு வினாக்களுக்குமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி – I

01. (அ) மானுடவாதம் என்றால் என்ன? அதன் தோற்றம் வளர்ச்சி பற்றி எடுத்துக்கூறுக.

(ஆ) இலக்கியம் மானுட உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு ஊடகம் என்ற வகையில் சங்க இலக்கியம் மானுட உணர்வுகளை வெளிப்படுத்துமாற்றை விளக்குக.

02. ‘மானுடவாதம் மானுடமேன்மை கருதியதே’ விளக்குக. அறநூல்கள் மானுட மேன்மை கருதி இயற்றப்பட்டிருக்குமாற்றை சங்க மருவிய கால அறநூல்களை ஆதாரமாகக் கொண்டு மதிப்பிடுக

### பகுதி – II

03. “மானுட உணர்வுகளைத் தெய்வீக உறவு நிலையுடன் இணைத்துப் பாடப்பட்டவையே பக்தி இலக்கியங்கள். இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக.

04. பாரதியார் முழுமானுடத்துக்குமான விடுதலையை நோக்கிப் பாடியுள்ளார்.
தொழிலாளர் விடுதலை
பெண் விடுதலை
சாதி விடுதலை
தேச விடுதலை என்பவற்றினடிப்படையில் இக்கூற்றினை விளக்குக

05. “நவீன இலக்கியங்கள் சமூகத்தில் உயர்ந்தோரின் புகழைப் பேசுவதை விடுத்து சாதாரண மனிதர்களின் அவலங்களையும் துயரங்களையும் பேசத் தொடங்கின.”
புதுமைப்பித்தனின் சிறுகதைகளை ஆதாரமாக வைத்து இக்கூற்றினை விளக்குக.

***